

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப.,அவர்கள், இந்திய விமானப்படை மூலம், நாகர்கோவில், ஸ்காட் கிறிஸ்துவ கல்லூரியில், நடமாடும் வாகனம் மூலம் நடத்தப்பட்ட விழிப்புணர்வு கண்காட்சினை இன்று (29.11.2016) நேரில் பார்வையிட்டார்.

**செ.வெ.எண்: 842/2016** **நாள்: 29.11.2016**

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப.,அவர்கள், இந்திய விமானப்படைப் மூலம் நடத்தப்பட்ட விழிப்புணர்வு கண்காட்சினை இன்று (29.11.2016) நேரில் பார்வையிட்டார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப.,அவர்கள், இந்திய விமானப்படை மூலம், நாகர்கோவில், ஸ்காட் கிறிஸ்துவ கல்லூரியில், நடமாடும் வாகனம் மூலம் நடத்தப்பட்ட விழிப்புணர்வு கண்காட்சினை இன்று (29.11.2016) நேரில் பார்வையிட்டார்.

நாகர்கோவில், ஸ்காட் கிறிஸ்துவ கல்லூரியில் நடைபெற்ற தேசிய மாணவர் படை முகாமில், இந்திய விமானபடை மூலம், சுமார் 20 நபர்கள் கொண்ட குழு, தேசிய மாணவர் படை, மாணவ, மாணவியர்களிடம் இந்திய விமானப்படைப் பிரிவில் சேருவதற்கு தேவையான வழிமுறைகள், (நடமாடும் வாகனம் மூலம்) விமானம் பறக்கும் செயல்பாடுகள், பைலட் செய்யும் பணிகள், விமானப் படையில் சேருவதற்கு வழிமுறைகள், பயிற்சி முறைகள் போன்றவைகள் விளக்கப்பட்டன. இதில் சுமார் 522 மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பின்னர் மாணவ, மாணவியர்களின் கேள்வி, பதில் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் விங் கமாண்டர் திரு. கே. குமார், ஸ்குான்ட்ன் லீடர் திரு. எஸ்.டி. ராஜா, Flight Lieutenant திரு. எஸ். ரத்னன் மற்றும் CO 11(TN) BN திரு. சஷில் குமார், Master Warrant Officer திரு. ஜி. ராமலிங்கம் மற்றும் தேசிய மாணவர் படை மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.